மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01 ம் நாள் திங்கட்கிழமை

இ.ம,எண்.04/2024
உள்
அசல் வழக்கு எண்.02/2023
––––––––

1.சுப்பம்மாள்
2. ராமர்
3. மாரிச்சாமி
4. ராமலட்சுமி
5. முருகலட்சுமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. தங்கமாரிமுத்து
2. முத்துமாரி
3. சின்னமுத்துமாரி
4. பூமாரி
5. மாரீஸ்வரி
6. முத்துமாரி
7. பெரிய ராஜா
8. பெரியசாமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 19.02.2024 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 13.03.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.கணபதிராமன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சங்கர்ராம் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 16, 17 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள

காரணங்களினால், மனுவை ஏற்று வழக்குரையில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 12.02.2024 ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>**

4 ம் மனுதாரர்/4 ம் வாதி மற்ற மனுதாரர்களுக்காகவும் அபிடவிட்டு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கை மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக 24.09.2020 ம் தேதி கிரைய ஆவணம் இல்லா நிலையது என்று விளம்புகை பரிகாரமும், இதர பரிகாரங்களும் கேட்டு தாக்கல் செய்துள்ளார். அதில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆஜராகியுள்ளனர். இன்றுவரை எதிர்வழக்குரை ஏதும் தாக்கல் செய்யவில்லை. அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து விபரத்தை தபசிலாக காட்டியுள்ளார்கள். மேற்படி சொத்து விபரத்தில் அளவுகளை தவறுதலாக குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. கவனக்குறைவால் ஏற்பட்டுவிட்டது. தற்போது மேற்படி தவறு மனுதாரர்கள் கவனத்திற்கு வந்தது. அசல் வழக்கில் சொத்து விபரம் தெளிவாக குறிப்பிட வேண்டியது மிக அவசியமாக உள்ளது. எனவே, சொத்து விபரத்தில் ஏற்பட்டுள்ள மேற்படி தவறை சீர்திருத்தம் செய்து வழக்கை மேல்நடத்த வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. இல்லாதுபோனால் மனுதாரர்களுக்கு அசல் வழக்கில் மிகுந்த இழப்பு ஏற்பட்டுவிடும். எனவே, வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். எனவே, இந்த மனுவை அனுமதிக்காது போனால் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடும். இந்த மனு மீது எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித நியாயமான ஆட்சேபணைகள் இருக்கப்போவதில்லை என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்ட்டுள் எதிருரை சுருக்கம்:–</u>**

இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகள்

வன்மையாக மறுக்கப்படுகிறது. மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாவா வழக்கு சொத்தை முழுமையாக அமைதியாக அனுபவித்து வருவதை மனுதாரர்கள்/வாதிகள் எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகள் மீது நீதிமன்றத்தில் தாவா அ.வ.எண்.57/2021 என வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதில் வழக்கு சொத்தில் தனக்கு வடபாதியில் பாதி பங்குரிமை உள்ளது என்று விளம்புகை பரிகாரம் அதன் தொடர்ச்சியாக இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மனுதாரர்கள்/வாதிகள் எதிர்வழக்குரையுடன் கூடிய எதிர்கோருரிமை தாக்கல் செய்துள்ளார்கள். அ.வ.எண்.57/2021 வழக்கின் வாதியாக இருந்து 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 14.10.2022ம் தேதியன்றே நிரூபண அபிடவிட்டு தாக்கல் செய்து வா.சா.ஆ.1 முதல் 8 குறியீடு செய்யப்பட்டது. பின்னர் கூடுதல் ஆவணங்கள் கடந்த 14.11.2022ல் குறியீடு செய்யப்பட்டது. பின்னர் வாதியை குறுக்குவிசாரணை செய்வதற்காக கடந்த 05.12.2022, 14.12.2022, 06.01.2023 ஆகிய தேதிகளில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு வாய்தா வழங்கப்பட்டது. இருந்தபோதும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியை குறுக்குவிசாரணை செய்யாமல் பிராதின் சொத்து விபரத்தினை சீர்திருத்தம் செய்வதற்கு அனுமதி கோரி மனுதாரர்கள்/வாதிகள் கடந்த 06.01.2023ம் தேதியன்று மனு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி சீர்திருத்த இ.ம.எண்.02/2023 மனு கடந்த 13.02.2023ல் அனுமதிக்கப்பட்டும், பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டது. அதன்பின்னர் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்தபின்னர் மனுதாரர்கள்/வாதிகள் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியை குறுக்குவிசாரணை செய்வதற்காக 08.09.2023, 25.09.2023, 27.9.2023, 29.09.2023, 11.10.2023 என பல வாய்தாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் அவர்களுடைய சகோதர, சகோதரிகள் மீது அ.வ.எண்.02/2023 என தாவா வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள். அதில் வழக்கு தபசில் சொத்து பொறுத்து 2 முதல் 8 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக கடந்த 24.09.2020ம் தேதி சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ள கிரைய ஆவணம்

எண்.5436/2020 இல்லாநிலையது என்றும், வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதில்லை என்று விளம்புகை பரிகாரம் கோரியிருக்கிறார். மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றத்தை தவறாக பயன்படுத்தி அ.வ.எண்.02/2023 வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள்/வாதிகள் தங்களுடைய Whole claim ஐ அ.வ.எண்.57/2021 வழக்கின் கவுண்டர் கிளைமிலேயே கோரியிருக்க வேண்டும். அதில் தவறவிட்ட பரிகாரத்தை அ.வ.எண்.02/2023 வழக்கில் கோருகிறார்கள். மேற்படி அ.வ.எண்.02/2023 வழக்கின் வழக்கு மூலம் அ.வ.எண்.57/2021 வழக்கிலேயே உற்பத்தியாகிவிட்டது என மனுதாரர்கள்/வாதிகளே அ.வ.எண்.57/2021 வழக்கில் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

இந்த சூழ்நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் சொத்து விபரத்தில் அளவுகளை தவறுதலாக குறிப்பிட்டுள்ளோம், தவறுதல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. கவனக்குறைவால் ஏற்பட்டுவிட்டது. தற்போது மேற்படி தவறு தங்களது கவனத்திற்கு வந்தது என்று கூறுவது அப்பட்டமான பொய்யாகும். அதுபோல் அ.வ.எண்.57/2021 வழக்கிலும் மனுதாரர்கள் குறுக்குவிசாரணையை காலம் கடத்து நோக்கத்தில் கடந்த 06.01.2023 ல் சொத்து விபரத்தை சீர்திருத்தம் செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, அச்சமயத்திலேயே தாவா வழக்கின் சொத்து விபரத்தை கடந்த ஒரு ஆண்டு காலம் அமைதியாக இருந்துவிட்டு தற்போது 12.02.2024 ல் சீர்திருத்தம் செய்ய அனுமதி கோருவது கவனக்குறைவல்ல. வேண்டுமென்றே கெட்ட எண்ணத்தில் செயல்படுவதாகும். எனவே, மனுதாரர்/வாதி கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. தாவா வழக்கை இழுத்தடித்து பிரதிவாதிகளை மன உளைச்சலுக்கு ஆளாக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலேயே செயல்பட்டு வருவதால் தாவா மனுவை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **<u>தீர்வு</u>**:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் மனுவை ஏற்று வழக்குரையில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 12.02.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். கட்டளை 7 விதி 3 சிபிசி–ன்படி ஒரு வழக்கில் சொத்து பற்றிய விபரம் சரியாக சொல்லப்பட வேண்டியது அவசியமான ஒன்றாகும். எனவே, இந்த மனுவினை மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்துகொள்ள அனுமதிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை நிராகரிக்கும்பட்சதத்தில் இவ்வழக்கில் சரியான தீர்ப்பை எட்ட முடியாமல் போய்விடக்கூடும். எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, மனுவை ஏற்று வழக்குரையில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 12.02.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.04/2024
உள்
அ.வ.எண்.02/2023
**உத்தரவு**
நாள்– 01.04.2024